# வாழ்வாதார வழிநடத்தல்

# வழிநடத்துதல் மற்றும் பயிற்சியளித்தல்

## நாடு திரும்பிய பெண்களுக்கு மிகவும் அதிகம் தரமதிபீடு செய்யப்பட்ட மூன்று துறைகள்

1. யாழ்ப்பாணம் – வாழை நார், சிகை அலங்காரம், முருங்கைப் பொருட்கள்
2. கிளிநொச்சி – கருவாடு தயாரித்தல், உடற்பயிற்சி புத்தகங்கள் தயாரித்தல், பாய்கள் மற்றும் சிற்றுண்டி தயாரித்தல்
3. மன்னார் – சிறு தொழில் துறைகள், உணவு பதப்படுத்துதல், பனையோலை கைவினைப் பொருட்கள்
4. முல்லைத்தீவு – துரித உணவு தயாரித்தல், தேங்காய் நார் பொருட்கள் தயாரிப்பு, உணவுப் பொருட்கள்,
5. வவுணியா – முந்திரி, நவீன நகைத் தயாரிப்பு, பழச் செடிகள் மற்றும்
6. திருகோணமலை – பேக்கரி கட்டிடம் உருவாக்குதல், உணவு வழங்குதல் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல், கைவினைப் பொருட்கள், சில்லரை கடைகள், தையல் தொழில், கோழி வளர்ப்பு மற்றும் அரிசி மாவு பேக் செய்தல்.

### மற்ற துறைகள்

1. **யாழ்ப்பாணம்:** கடல் உணவு பதப்படுத்துதல், காளான் உற்பத்தி, சுருள்பாசி உற்பத்தி, பனை ஓலையைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரித்தல், கால்நடைகள் (ஆடுகள் மாடுகள்), கோழி வளர்ப்பு, நவீன கைவினை நகைத் தயாரிப்பு, பதப்படுத்தப்படுத்தப்பட்ட காய்கறிகள் உற்பத்தி செய்தல், கைத்தறி பொருள் தயாரிப்பு, நார்ப் பொருட்கள் தயாரிப்பு, வாழை நார்ப் பொருள் தயாரிப்பு, சிகை அலங்காரம், முருங்கைப் பொருட்கள் தயாரித்தல், விவசாயம், நவீன ஆடை வடிவமைப்பு, மின்னணுப் பொருட்கள் பழுதுநீக்கம் மற்றும் வைன் தயாரிப்பு.
2. **கிளிநொச்சி:** வீட்டுத் தோட்டம், கோழி (நாட்டுக்கோழி) வளர்ப்பு, கறி மற்றும் பாலுக்காக ஆடு வளர்ப்பு, பத்திக் துணி வடிவமைப்பு, கைத்தறி ஆடைகள், செயற்கை தோல் பொருட்கள், செயற்கை மலர்கள், காகித கைவினைப் பொருட்கள், அழகு கலாச்சார அலங்காரம், ஸ்மார்ட் ஃபோன் பழுதுநீக்கம், கிராஃபிக் வடிவமைப்பு, சிசிடிவி கண்காணிப்பு வன்பொருள் நிறுவுதல், டிஜிட்டல் மார்க்கெட்டிங், கருவாடு தயாரிப்பு, பயிற்சி புத்தகங்கள் தயாரித்தல், பாய்கள் தயாரித்தல், சிற்றுண்டி தயாரிப்பு, கைவினைப்

பொருட்கள், பழங்களிலிருந்து இனிப்பு தயாரித்தல், ஊட்டச்சத்து மாவு தயாரித்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் மற்றும் மளிகை கடை நடத்துதல்.

3. **மன்னார்:** கோழி வளர்ப்பு, உணவுப் பதப்படுத்துதல், தையல், விவசாயம் (காய்கறிகள் விற்பனை), இயற்கை முறையில் காய்கறி உற்பத்தி மற்றும் வாகனங்கள் பழுதுநீக்கும் பணிமனை நடத்துதல், சிறு தொழில்கள், உணவுப் பதப்படுத்துதல், பனையோலை கைவினைப் பொருட்கள், பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு, சேலையில் வடிவங்கள் உருவாக்குதல் மற்றும் சிற்றுண்டி தயாரித்தல்.
4. **முல்லைத்தீவு:** கோழி வளர்ப்பு, காளான் உற்பத்தி, ஸ்கிரீன் பிரிண்டிங், கழிவுப் பொருட்களில் (தேங்காய் ஓடு, காகிதம், நார்) இருந்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல், தேனீ உற்பத்தி, இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு, துரித உணவு தயாரிப்பு, உணவுப் பொருட்கள் உற்பத்தி, இயற்கை விவசாயம் மற்றும் ராகி பஞ்சு தயாரிப்பு.
5. **வவுனியா:** செயற்கை தோல்பொருட்களைப் பயன்படுத்தி பைகள் தயாரித்தல், உணவு விநியோகம், மதிப்புக் கூட்டப்பட்ட (பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள்) பொருட்கள் தயாரிப்பு, மிச்சர் மற்றும் கால்நடை, கைவினைப் பொருட்கள், பத்திக் தயாரிப்பு, காகித மறுசுழற்சி, முந்திரி, நவீன நகை, பழச் செடி உற்பத்தி, ஸ்கிரீன் பிரிண்டிங் மற்றும் பனையோலை கைவினைப் பொருட்கள்.
6. **திருகோணமலை:** தையல், துணி வியாபாரம், பெட்டிக் கடைகள், காலையுணவு விநியோகம், நகல் நகைத் தயாரிப்பு, துணி தைத்தல், நாள் கூலி வேலை செய்தல் மற்றும் கால்நடை வளரப்பு (பிராணிகள வளர்த்தல், கோழி, ஆடுகள் வளர்ப்பு), சிறு தொழில், பேக்கரி, கட்டிடம் கட்டுதல், கேக் தயாரிப்பு, ஆடை தயாரிப்பு, விவசாயம், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, வீட்டுத் தோட்டம், ஆப்பம் விற்பனை செய்தல், ஐஸ் கிரீம் தயாரிப்பு, மதிய உணவு, இரவு உணவுப் பொட்டளங்கள் தயாரித்தல், கோழி வளர்ப்பு, சில்லரை கடைகள், அரிசிமாவு பேக்கிங் செய்தல் மற்றும் தையல் தொழில்.

## 1.1. வாழ்வாதார வாய்ப்புகள்

வடக்கு பிராந்தியத்தில் கிடைத்த இரண்டாம் கட்ட தகவல்களை மதிப்பாய்வு செய்ததில் நெற்பயிர் மட்டுமல்லாமல், வெங்காயம், மரவள்ளிக் கிழங்கு, பச்சை மிளகாய், காய்கறிகள், வாழை மற்றும் திராட்சை ஆகிய மற்ற பயிர்களும் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது தெரியவந்துள்ளது. கால்நடை வளர்ப்புத் துறையில் மீன்கள், கால்நடைகள், எருமை மாடு, ஆடுகள் மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவை அடங்கும். இதர வருமானம் ஈட்டும் பணிகளில் சில்லரைக் கடைகள், உணவகங்கள், துணிக்கடை மற்றும் காலணி, மரம் மற்றும் மரச்சாமான்கள், சுரங்கப்பணி மற்றும் கனிமங்களை வெட்டி எடுத்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் சுற்றுலா ஆகியவை அடங்கும்.

திருகோணமலையில் நெல் மற்றும் தேங்காய் ஆகியவை முக்கிய பயிர்களாகும். இதர பயிர்களில் முந்திரி, மாங்காய், ஆரஞ்சு, எழுமிச்சை, வாழை, பப்பாளி, கோதுமை, வெங்காயம், மரவள்ளிக் கிழங்கு, பச்சை மிளகாய் மற்றும் காய்கறிகள் ஆகியவை அடங்கும். வடக்கில் உள்ளது போல், கால்நடை வளர்ப்பில் மீன்கள், கால்நடைகள், எருமை மாடு, ஆடுகள் மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவை அடங்கும். வருமானம் ஈட்டும் பணிகளில் சில்லரைக் கடைகள், உணவகங்கள், துணிக்கடை மற்றும் காலணி, மரம் மற்றும் மரச்சாமான்கள், சுரங்கப்பணி மற்றும் கனிமங்களை வெட்டி எடுத்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் மரசாமான் உற்பத்தி ஆகியவை அடங்கும்.

நாடு திரும்பியோர் மற்றும் தொழில்முனைவோருடன் நடத்தப்பட்ட குழு விவாதங்கள், மாவட்டங்களில் உள்ள பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள நாடு திரும்பியோர் மற்றும் தொழில்முனைவோருடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கிடைத்த முடிவுகளின்படி நாடு திரும்பிய பெண்களுக்கு பெரும்பாலும் பாரம்பரிய துறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம்:** நாடு திரும்பியோர் மூலமாக குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் கடலுணவு பதப்படுத்துதல், காலாண் உற்பத்தி, சுருள்பாசி தயாரிப்பு, பனையோலையைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரித்தல், கால்நடை (ஆடு/மாடுகள்), கோழி வளர்ப்பு, நவீன கைவினை நகைத் தயாரிப்பு, பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் தயாரிப்பு போன்றவை உள்ளடங்கும். யாழ்பாணத்தில் உள்ள முக்கிய தகவல் வழங்குவோர் நாடு திரும்பியோருக்கு கைவினைப் பொருட்கள், நார் பொருட்கள், பனையோலைப் பொருட்கள் தயாரிப்பு, மற்றும் இதர கைவினைப் பொருட்கள் தயாரிப்புத் துறை வாழ்வாதாரத்திற்கு சிறந்தது என்று தெரிவித்தனர். யாழ்பாணத்தில் உள்ள தொழில் முனைவோர் நாடு திருப்பியோருக்கு வாழைநார் பொருட்கள் தயாரிப்பு, சிகை அலங்காரம், முருக்கைப் பொருட்கள் தயாரிப்பு, விவசாயம், நவீன ஆடை வடிவமைப்பு, மின்னணு பொருட்கள் பழுது நீக்கம் மற்றும் மது தயாரிப்பு ஆகியவற்றைத் தெரிவித்தனர்.

**கிளிநொச்சி :** அங்கே நாடு திரும்பியோருடன் நடத்தப்பட்ட குழு விவாதத்தின்போது வீட்டுத் தோட்டம் அமைத்தல், கோழி (நாட்டுக்கோழி) வளர்ப்பு மற்றும் கறி மற்றும் பாலுக்கு ஆடு வளர்ப்பு ஆகியவை சிறந்த துறைகளாகவும் இவற்றுக்கு நிரந்தரமான தேவை இருப்பதும் அவற்றை குறைந்த முதலீட்டில் செய்ய முடியும் என்றும் தெரிவித்தனர். முக்கிய தகவல் வழங்குவோர் பத்திக் ஆடை வடிவமைப்பு, கைத்தளி, செயற்கை தோல் பொருள் பொருட்கள் தயாரிப்பு, செயற்கை மலர்கள் மற்றும் காகிதப் பொருள் தயாரிப்பு ஆகியவற்றைத் தேர்வு செய்துள்ளனர். சேவைகளில் அழகு படுத்துதல், ஸ்மார்ட் ஃபோன் பழுதுநீக்கம், கிராஃபிக் வடிவமைப்பு, கண்காணிப்பு கேமரா நிறுவுவதற்கான வன்பொருள் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் ஆகியவை அடங்கும். தொழில்முனைவோர் மூலமாக கண்டறியப்பட்ட

பிரிவுகளில் மீன் உற்பத்தி, பயிற்சிப் புத்தகங்களைத் தயாரித்தல், பாய்கள் தயாரித்தல், சிற்றுண்டி தயாரிப்பு, கைவினைப் பொருட்கள், பழத்திலிருந்து இனிப்புகள் தயாரித்தல், தோட்டக்கலை, ஊட்டச்த்து மாவுகளைத் தயாரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல் மற்றும் மளிகை கடை நடத்துதல் ஆகியவை அடங்கும்.

**மன்னார்:** நாடுதிரும்பியோருடன் நடத்தப்பட்ட குழு விவாதத்தில் கோழி வளர்ப்பு, உணவுப் பதப்படுத்துதல், தையல், விவசாயம் (காய்கறி விற்பனை), இயற்கைக் காய்கறி உற்பத்தி மற்றும் வாகன பழுதுநீக்கும் கேரேஜ் மெக்கானிக் ஆகியவை குறிப்பிடப்பட்டன. மன்னாரில் உள்ள முக்கிய தகவல் வழங்குவோர் சிறு தொழில் துறையை அதிக வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டனர், எனினும் இந்த தொழில்பிரிவுக்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது. எளிதாக துவங்குதல், வளர்ச்சிக்கான அதிக வாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஆதாரங்கள் மற்றும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிப்பது ஆகியவற்றில் இது இரண்டாவது சிறந்த பிரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் சிறு தொழில்கள், உணவு பதப்படுத்துதல், பனையோலை கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு, சேலையை அழகுபடுத்தும் கைவினை செயல்கள் மற்றும் சிற்றுணடி உற்பத்தி ஆகியவற்றை சிறந்த வாய்ப்புள்ள துறைகளாக குறிப்பிட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு:** கோழி வளர்ப்பு, காளான் உற்பத்தி, ஸ்கிரீன் பிரிண்டிங், கழிவுப் பொருட்களில் (தேங்காய் ஓடு, காகிதம், நார்) இருந்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல், தேனீ உற்பத்தி, இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை குழு விவாதத்தில் நாடு திரும்பியோருக்கு சிறந்த துறைகளாக கண்டறியப்பட்டுள்ளன. கைத்தரி, பனை ஓலை மற்றும் நார்ப் பொருட்கள் தயாரிப்பு போன்ற சிறிய கைத்தொழில் துறைகள் அதிக வாய்ப்புள்ளவை என்று முக்கிய தகவல் வழங்குவோர் குறிப்பிட்டனர். தொழில்முனைவோர் துரித உணவு, நார் பொருட்கள், உணவுப் பொருட்கள் தயாரிப்பு, இயற்கை விவசாயம் மற்றும் அழுததமான ஃபோம் தயாரிப்பு ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளனர்.

**வவுனியா**: செயற்கை தோல் பொருளைக் கொண்டு பைகள் தயாரித்தல், உணவு விநியோகம், மதிப்புக் கூட்டப்பட்ட (பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள்) பொருட்கள் தயாரிப்பு, மிச்சர் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை குழு விவாதங்களின்போது நாடுதிரும்பியோர் தெரிவித்தனர். கைவினைப் பொருட்கள், பத்திக் தயாரிப்பு, காகித மறுசுழற்சி ஆகியவை சம்மந்தமான சிறுதொழில் துறைகள் அதிக வாய்ப்புள்ளவை என்று வவுனியாவில் முக்கிய தகவல்வழங்குவோர் தெரிவித்தனர். தொழில் முனைவோர் முந்திரி, நவீன நகை, பழச் செடி உற்பத்தி, ஸ்கிரீன் பிரிண்டிங் மற்றும் பனையோலை கைவினைப் பொருட்கள் தயாரிப்பு ஆகியவற்றை நாடு திரும்பியோர் தங்களது வாழ்வாதாரத்தைத் துவங்குவதற்கான சிறந்த துறைகளாக கண்டறிந்துள்ளனர்.

**திருகோணமலை :** தையல், துணி வியாபாரம், பெட்டிக் கடைகள், காலையுணவு விநியோகம், நகல் நகைத் தயாரிப்பு, துணி தைத்தல், நாள் கூலி வேலை செய்தல் மற்றும் கால்நடை வளரப்பு (பிராணிகள வளர்த்தல், கோழி, ஆடுகள் வளர்ப்பு) போன்றவை குழு விவாதங்களின் போது நாடு திரும்பியோரால் கண்டறியப்பட்ட துறைகளாகும். சிறுதொழில் துறைதான் நாடு திரும்பியோர் வாழ்வாதார செயல்களைத் துவங்குவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக முக்கிய தகவல் வழங்குவோர் தெரிவித்தனர். பேக்கரி, கட்டிடம் கட்டுதல், கேக் தயாரிப்பு, கால்நடை வளர்ப்பு, ஆடை தயாரிப்பு, விவசாயம், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, வீட்டுத் தோட்டம், ஆப்பம் விற்பனை செய்தல், ஐஸ் கிரீம் தயாரிப்பு, மதிய உணவு, இரவு உணவுப் பொட்டளங்கள் தயாரித்தல், கோழி வளர்ப்பு, சில்லரை கடைகள், அரிசிமாவு பேக்கிங் செய்தல் ஆகியவை அவர்களால் கண்டறியப்பட்ட தொழில்களாகும்.

**தீர்மானம்**: வாழ்வாதார செயல்களுக்காக கண்டறியும்படி கேட்கப்பட்டபோது பதிலளித்தோர் பெரும்பாலும் பாரம்பரியமாக பெண்கள் சம்மந்தமான தொழில்களை மட்டுமே குறிப்பிட்டனர். உதாரணமாக, பெரும்பாலானவர்கள் நாடு திரும்பியோர் தங்களது வாழ்வாதாரத்தை துவங்க தையல் பணி செய்வதைக் குறிப்பிட்டனர். அவர்கள் குறிப்பிட்டவற்றில் பாரம்பரியமற்ற செயல்களில் மென்பொருள் உருவாக்கம் (யாழ்ப்பாணம்), சைக்கிள் பழுதுநீக்கம், வீடியோ எடுத்தல் மற்றும் எடிட்டிங் செய்தல் (கிளிநொச்சி ), வாகனம் பழுதுநீக்கம், ஸ்டுடியோ (மன்னார்), வெல்டிங் மற்றும் கட்டிடப் பணி (முல்லைத்தீவு), பிளம்பிங், வெல்டிங், கொத்தனார் பணி, ஆசாரிப் பணி, ஆட்டோ மெக்கானிக் மற்றும் தேனீ வளர்ப்பு (வவுனியா) மற்றும் மொபைல் ஃபோன் பழுதுநீக்கம் (திருகோணமலை) ஆகியவையாகும். ஆய்வின் மூலமாக கருத்து கேட்கப்பட்ட நிறுவனங்கள அழகுப் பணிகள், உணவு பதப்படுத்துதல், தையல்கலை, கணினி, கைவினைப் பொருட்கள், இனிப்புகள் தயாரிப்பு, சிகை அலங்காரம், படடிக் பணி, பிரிண்டர்கள், மாவு அறைக்கும் நிலையங்கள், கருவாடு, பனை ஓலைப் பொருள் தயாரிப்பு, காலணிகள் மற்றும் பைகள் தயாரிப்புத் துறை ஆகியவற்றில் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். சில நாடு திரும்பியோர் அத்தகைய துறைகளில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளனர். நாடு திரும்பிய பெண்கள் பாரம்பரியமாக பெண்கள் சம்மந்தமான தொழிலிலோ அல்லது பாரம்பரியம்-சாராத தொழில் பிரிவுகளிலோ வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ளலாம். எனினும், அவர்கள் எத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி அவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வழங்கப்பட வேண்டும் மேலும் இத்தகைய பிரிவுகளில் சந்தையில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு தொழில்நுட்பத் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

## 1.2. தற்போது சந்தையில் தேவைப்படும் திறன்கள்

எந்தவகையான வாழ்வாதார செயல்களிலும ஈடுபடுவதற்கு தேவையான திறன்களில் குறிப்பிட்ட துறைக்கு தேவையான தொழில்நுட்பத் துறைகளும் தகவல்தொடர்பு, தலைமைப் பண்பு, சரியான மனப்பான்மை மற்றும் பணியில் ஈடுபாடு போன்ற தொழில்முனைவோராக ஆவதற்குத் தேவையான மென் திறன்களும் உள்ளது. இந்த ஆய்வின் போது நேர்காணல் செய்யப்பட்ட தொழில் முனைவோரிடம் அவர்கள் ஆட்களை வேலைக்கு எடுக்கும்போது என்ன மாதிரியான திறன்களைப் பார்ப்பார்கள் என்று கேட்கப்பட்டது. மாவட்ட வாரியாக அவரகள் வழங்கிய பதில் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்:** பணி குறித்த ஆர்வம் மற்றும் தகவல்தொடர்புத் திறன்கள், தொழில்நுட்பத் திறன்கள், மனப்பான்மைகள், சமுதாய திறன்கள், நன்றாக ஆடையணிகளன் அணிதல், உடையுடை பாவனை மற்றும் சுத்தம், பணியின் தரம் மற்றும் உற்பத்தித் திறன், தலைமைப்பண்பு மற்றும் குழு பணியில் முன்முயற்சி மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றைப் பார்ப்பதாக 90% தொழில் முனைவோர் தேரிவித்தனர். 80% மக்கள் தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்களைப் பார்த்தனர். 20% மட்டுமே பணியாளர்களை எடுக்கும்போது ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்களைப் பார்ப்பதாக தெரிவித்தனர்.

**கிளிநொச்சி :** அனைத்து தொழில்முனைவோரும் மனப்பான்மை மற்றும் சமுதாயத் திறன்கள், தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்கள், பணியின் தரம் மற்றும் உற்பத்தித்திறன், குழுவாக பணி செய்வதில் ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பார்த்தனர். 90% மேலானவர்கள் தொழில்நுட்பத் திறன்கள், ஆடையணிதல் மற்றும் சுத்தம் மற்றும் தலைமைப்பண்பு மற்றும் முன்முயற்சி ஆகியவற்றைப பார்த்தனர். 16.7% மட்டுமே பணியாளர்களை எடுக்கும்போது ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்களை கருத்தில் கொள்கின்றனர்.

**மன்னார்:** அனைத்து தொழில்முனைவோரும் தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்கள், பணியின் தரம் மற்றும் உற்பத்தித்திறன், குழுவாக பணி செய்வதில் ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பார்த்தனர். 90% மேலானவர்கள் தொழில்நுட்பத் திறன்கள், ஆடையணிதல் மற்றும் சுத்தம் மற்றும் தலைமைப்பண்பு மற்றும் முன்முயற்சி ஆகியவற்றைப பார்த்தனர். 73.3% பணியாளர்களை எடுக்கும்போது மனப்பான்மை மற்றும் சமுதாயத் திறன்கள் ஆகியவற்றைப் பார்த்தனர். 6.7% மட்டுமே ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்களை பார்க்கின்றனர்.

**முல்லைத்தீவு:** அனைத்து தொழில்முனைவோரும் தொழில்நுட்பத் திறன்கள், தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்கள், பணியின் தரம் மற்றும் உற்பத்தித்திறன், குழுவாக பணி செய்வதில் ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பார்த்தனர். 93.3% மனப்பான்மை மற்றும் சமுதாயத் திறன்கள் ஆடையணிதல் மற்றும் சுத்தம் ஆகியவற்றைப் பார்த்தனர் அதேவேளை 83.3% தலைமைப் பண்பு மற்றும் தன்முயற்சியைப் பார்த்தனர். 6.7% மட்டுமே ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்களை பார்த்தனர்.

**வவுனியா**: அனைத்து தொழில்முனைவோரும் மனப்பான்மை மற்றும் சமுதாயத் திறன்கள், தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்கள், பணியின் தரம் மற்றும் உற்பத்தித்திறன், தலைமைப் பண்பு மற்றும் தன்முயற்சி, குழுவாக பணி செய்வதில் ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பார்த்தனர். இந்த திறன்கள் தொழில்நுட்பத் திறன்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவது கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும் ஏனெனில் இதை 56.7% மட்டுமே கருதுகின்றனர். 96.7% ஆடையணிதல் மற்றும் சுத்தம் ஆகியவற்றை கருதுகின்றனர். வெறும் 6.7% மட்டுமே ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்களைக் கருதுகின்றனர்.

**திருகோணமலை :** அனைத்து தொழில்முனைவோரும் தகவல்தொடர்பு மற்றும் மொழித் திறன்கள், பணியின் தரம் மற்றும் உற்பத்தித்திறன், மற்றும் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பார்த்தனர். 84.2% பேர் நேர்மறை மனப்பான்மை மற்றும் சமுதாய திறன்களை பார்த்தனர். 68.4% தொழில்நுட்பத் திறன்களையும ஆங்கிலம் மற்றும் கணினித் திறன்கள் உள்பட மென்திறன்களையும் பார்த்தனர். அவர்கள் 47.4% தலைமைப் பண்பு மற்றும் தன்முயற்சியையும் ஒத்துழைப்பு மற்றும் குழுவாக பணி செய்தல் ஆகியவற்றைப் பார்த்தனர்.

**தீர்மானம்**: அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட சராசரி தரமதிப்பீட்டின்படி எல்லா மாவட்டங்களிலும் உள்ள அனைத்து தொழில் முனைவோரிடமும் கேட்கப்பட்டதில் அவர்கள் பணியாளர்களைத் தேர்வு செய்யுமபோது இந்தந்த திறன்களை பார்ப்பார்கள் என்று குறிப்பிட்டதில் ஆர்வம் மற்றும் பணியில் அர்ப்பணிப்பு ஆகியவை மிகவும் முக்கியமான திறனாக வெளிப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பணியின் தரம் மற்றும் உற்பத்தித் திறனும் (99.45%), தகவல் தொடர்பு மற்றும் மொழித்திறன்கள் (96.67%), நல்ல மனப்பான்மை மற்றும் சமுதாயத் திறன்கள் (90.13%), மற்றும் ஒத்துழைப்பு மற்றும் குழுவாக பணி செய்தல் (90.12%) ஆகியவை உள்ளன. இதனைத் தொடர்ந்து தலைமைப்பண்பு மற்றும் தன்முயற்சி (85.68%) மற்றும் ஆடையணிதல் மற்றும் சுத்தம் ஆகியவை வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் மேலே குறிப்பிட்ட அனைத்திற்கும் கீழேதான் பணியாளர்களின் தொழில்நுட்பத் திறன்கள் 84.18% இல் தரமதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது. பணி வழங்குவோர் பணியாளர்களிடம் தொழில்நுட்பத் திறன்களைவிட மற்ற திறமைகளைப் பார்க்கின்றனர் என்பதை இது காட்டுகிறது. மேலும் பணி வழங்குவோர்

தங்களது பணியாளர்களுக்கு தாங்களே பயிற்சி வழங்க விரும்புகின்றனர் என்ற விஷயத்திலும் இது உறுதி செய்யப்படுகிறது. இதன்மூலம் பணியைச் செய்யத் தேவையான தொழில்நுட்பத் திறன்கள் பணி வழங்குவோர் மூலமாக "பணியின் போது" வழங்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

## ஸ்வாட் (SWOT) மதிப்பாய்வு

*அட்டவணை 1*1: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - யாழ்ப்பாணம்

| | பலங்கள் | பலவீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | நிலம் இருத்தல் | சீதோஷண ஏற்றத்தாழ்வுகள்<br>பருவகால மாற்றங்கள் | விவசாயிகளுக்கு அரசின் ஆதரவு | விலை மாற்றங்கள் |
| **பேக்கரி மற்றும் ஐஸிங்** | புதுமையான வடிவமைப்பிற்கான தேவை | தொழில்நுட்பத் திறன்கள் குறைபாடு | அதிகமான திருமணங்கள் மற்றும் சமுதாய நிகழ்ச்சிகள் | ஆயத்த உணவுகளைத் தயாரித்து விநியோகிக்கும் பெரிய நிறுவனங்களில் இருந்து அதிக போட்டி |
| **வாழை நார் பொருள்** | அதிக லாபம் மற்றும் இயற்கைப் பொருட்களுக்கு அதிகரித்து வரும் தேவை | கச்சாப் பொருட்கள் கிடைப்பது பருகாலத்திற்கு ஏற்ப மாற்றமடைதல் | இயற்கைப் பொருட்களை கேட்கும் வெளிநாட்டினர் அந்த பகுதிக்கு வருவது அதிகரித்தல் | செயற்கைப் பொருட்களிடமிருநது அதிக போட்டி (பிளாஸ்டிக்) |
| **பத்திக் பொருள்** | புதிய வடிவமைப்பு மற்றும் ஆடைகளுக்கான தேவை | வடிவமைப்பின் வரம்பினை விரிவு படுத்தக்கூடிய தொழில்நுட்பத் திறன்கள் குறைவு | அந்த பகுதிக்கு அதிகமாக வரும் சுற்றுழாப் பயணிகளிடமிருந்து அதிக தேவை | மாற்றுப் பொருட்களின் போட்டி அதிகரித்தல் (மற்ற அச்சிடப்பட்ட ஆடைகள்) |
| **அழகுக் கலை** | துறையிலுள்ள தகுதிமிக்க வல்லுனர்கள் தங்களது சிறந்த அறிவினை | விநியோகம் மற்றும் உள்ளீட்டுப் பொருட்களின | பெண்களிடமிருந்து இந்த சேவைகளுக்கான தேவை அதிகரித்திருத்தல் | இத்துறையில் நுழையும் அதிகமான பெண்களிடமிருந்து போட்டி |

| | பலங்கள் | பலவீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | பகிர்ந்துகொள்ள தயாராக உள்ளனர் | விலை அதிகம் | (மணமகள் அலங்காரம், சிகை வெட்டுதல் மற்றும் அலங்காரம், சருமப் பராமரிப்பு, நகத்தில் வரையும் கலை போன்றவை) | அதிகரித்தல் |
| **மெழுகுவர்த்தி தயாரித்தல்** | தொழிலைத் துவங்க குறைவான முதலீடுதான் தேவை | தேவை பருவகாலத்திற்கு ஏற்ப மாறுபடும் | கைவினைப் பொருட்களுக்கான தேவை அதிகரிப்பு, இத்தகைய பொருட்களை சந்தைப்படுத்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் மற்றவர்களின் ஆதரவு கிடைத்தல் | அதிக அளவில் உற்பத்தி செய்வோரிடமிருந்து போட்டி ஏனெனில் சந்தையில் அவர்களது பொருட்கள் குறைந்த விலைக்கு கிடைக்கும் |
| **மீன்பிடித்தல்** | இந்த பிரிவில உள்ள வளங்கள், திறன்கள் மற்றும் அனுபவம் | ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கு பருவகால சூழ்நிலைகள் ஆபத்தை ஏற்படுத்தும் | உறுப்பினர்களுக்கு நன்மைகள் வழங்கும் மீன்பிடி கூட்டுறவு சங்கங்கள் போன்ற சேவை வழங்குவோர் இருத்தல் | இடைத் தரகர்களின் சுரண்டல் |
| **கைவினைப் பொருள் தயாரிப்பு** | கைவினைஞர்கள தயாரித்த மேம்பட்ட தரமான இயற்கைப் பொருட்களுக்கு தேவை அதிகரித்திருத்தல் | கச்சாப் பொருட்கள் (மை, இழைகள் போன்றவை) கிடைக்காமை மற்றும்/ அல்லது அவை விலை அதிகமாக இருத்தல் | வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகள் பொருட்களுக்கான தொடர் தேவையை உருவாக்குகிறது | விலை மலிவான மாற்றுப் பொருட்கள் (பிளாஸ்டிக், பாலித்தீன், செயற்கைப் பொருட்கள்) மற்றும் வெளிநாட்டுப் பொருட்களிடமிருந்து (சீனா, இந்தியா) போட்டி |
| **தகவல் தொழில்நுட்பம்** | இந்த பிரிவில் புரிதல் மற்றும் திறன்களுக்கான தேவை அதிகரித்திருத்தல் | தொழில்நுட்பம் விரைவாக மாறுவதால் திறன்கள் சிறிது காலத்தில் | இணையதளத்தில் விளம்பரம் செய்வது அதிகரித்துள்ளது மேலும் பல்வேறு தொழில் துறைகள்/ | தொழில்நுட்பத்தின் விரைவான மாற்றம் மற்றும் தேவையான திறன்களும் மாற்றமடைதல் |

| | பலங்கள் | பலவீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | மேலும் இது அதிக மக்களிடம் இருப்பது அவசியமாகிறது | பயனற்றதாக மாறிவிடுகிறது, சாதனத்தின் (கணினிகள்) விலை அதிகமாக இருப்பது | தொழில் முனைவோர் இதனை வேண்டுகின்றனர் | |
| **பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல்** | தரம் மற்றும் வடிவமைப்புகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரிக்கிறது | வறட்சியான சமயங்களில் பனை ஓலைகள் கிடைக்காமை, மையின் விலை அதிகமாக இருத்தல் | பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பொருட்களுக்கு மாற்றாக இயற்கைப் பொருட்களை கேட்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சந்தைகள் அதிகரிக்கும் வாய்ப்பு | மலிவான மாறறுப் பொருட்கள் (பிளாஸ்டிக் பொருள்) சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுதல், அவை விலை குறைவாக இருத்தல் |
| **கோழி வளர்ப்பு** | துவங்குவதற்கு குறைவான முதலீடு தேவைப்படுகிறது | இயற்கை பேரழிவுகள் மற்றும் சீதோஷண மாற்றங்கள், நோய்கள் மற்றும் கோழிகளுக்கு ஏற்படும் சுகவீனங்கள் | கோழி மற்றும் முட்டைகளுக்கு தேவை தொடர்ந்து இருத்தல் | பெரிய நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையிடமிருந்து போட்டி |
| **தையல்** | குறைவான முதலீடுதான் தேவை, நவீன ஆடைகளுக்கான தேவை தொடர்ந்து இருத்தல் | தொழில்நுட்ப மற்றும் வடிவமைப்புத் திறன்கள் குறைபாடு | வாடிக்கையாளர்களைக் கவர இணையதளம் மூலமாக (ஃபேஸ்புக், வாட்ஸாப் செயலி) விளம்பரம் செயதல் போன்ற நவீன சந்தைப்படுத்தும் முறைகளை பயன்படுத்தலாம் | மாறிவரும் ஆடை ரசனைகள மற்றும் போக்குகள் மேலும் ஆயத்த ஆடைப் பொருட்களை தயாரித்து விற்பனை செயயும் ஆடை உற்பத்தியாளர்களிடமிருநது போட்டி |

## அட்டவணை 22: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - கிளிநொச்சி

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **** விவசாயம்** | நிலம் இருத்தல் | சீதோஷண ஏற்றத்தாழ்வுகள்<br>பருவகால மாற்றங்கள்<br>மோசமான தண்ணீர மேலாண்மை | அரசின் மூலமாக தேசிய சந்தைகள் மற்றும் ஆதரவிற்கு அணுகல் கிடைத்தல் | விலை மலிவான இறக்குமதிகளின் போட்டி |
| **பத்திக் பொருட்ள்** | அதிக தரமான பொருளுக்கான தேவை | தொழில்நுட்பத் திறன்கள் குறைபாடு | இந்த பகுதியில் அதிக சுறறுலா அதிகரிப்பதன் மூலமாக தேவை அதிகரித்தல் | விலை மலிவான மாற்றுப் பொருட்களில் இருந்து போட்டி அதிகரித்தல் |
| **அழகுக் கலை** | துறையிலுள்ள தகுதிமிக்க வல்லுனர்கள் ஆதரவளிக்க தயாராக இருத்தல் | பயிற்சி சேவைகள் மற்றும் உள்ளீட்டுப் பொருட்களின் அதிக செலவு | சேவைகளுக்கான தேவைகள் இந்த பகுதிகளில் அதிகரிக்கிறது | அதிக பெண்கள் இந்த துறையில் வருவதால் போட்டி அதிகரித்தல் |
| **நார் பொருள் வேலைகள்** | கச்சாப் பொருள்கள கிடைத்தல் | பொருட்கள் மற்றும் உள்ளீடுகளின் மோசமான தரம் | சர்வதேச சந்தைகளுககு கிடைத்தல் | சந்தையில் பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளன அவை விலை மலிவான மாற்றாக உள்ளன |
| **மீன்பிடித்தல்** | கருவாடு பதப்படுத்திட குறைவான முதலீடுதான் தேவைப்படுகிறது | சீதோஷண மாற்றம்<br>பருவநிலைக்கு ஏற்ப மாறும் நிலை | ஆதரவு சேவைகளுக்கான தேவைகள் மற்றும் ஆதரவு தொடர்ந்து இருத்தல் | அதிகரிக்கும் போட்டி |
| **கைவினைப் பொருட்கள்** | மேம்பட்ட தரம் மற்றும் வடிவமைப்புகளுக்கான தேவை | கச்சாப் பொருட்கள் கிடைக்காமை<br>குறைவான லாபம் | வாடிக்கையாளர்களின் தேவைகள் அதிகரித்தல் | பிளாஸ்டிக் பொருட்களின் போட்டி |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **மளிகை** | முறையாக பராமரித்தல் லாபமாக இருத்தல் | ஒழுங்கற்ற பிரச்சனைகள் – கடைகள் எப்போதும் திறந்திருகக வேண்டும் | ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்குவதற்கான வாய்ப்பு | இந்த பகுதியில் திறக்கப்படும் பெரிய சூப்பர் மார்க்கெட்டுகளின் போட்டி |
| **கால்நடை** | புள்வெளி இருத்தல்<br><br>பாலுக்கான தேவை | தொடர் பராமரிப்பு மற்றும் கவனம் தேவை | பிராந்திய சந்தைகளை அடைவதற்கான வாய்ப்பு | திருட்டு நடப்பதால் பாதிப்பு, பால் பொருட்கள் மற்றும பாக்கெட் பால் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களிடமிருந்து போட்டி |
| **வீட்டுத்தோட்டம்** | நிலம் இருத்தல்<br><br>இயற்கை வேளான் பொருட்களுக்கு அதிக தேவை | முறையாக பராமரிக்கவில்லை என்றால் உற்பத்தி குறைதல் | நகர்ப்புற சந்தைகளுக்கு (கெலும்பு, கண்டி) இயற்கை வேளாண் பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்பு, அதைச் செய்ய தொண்டு நிறுவனங்களின் ஆதரவு | விலை மலிவான இறக்குமதிப் பொருட்களின் போட்டி, குறைவான விலையில் பொருட்களை வாங்க விரும்பும் இடைத் தரகர்களின் சுரண்டல் |
| **பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி** | தரம் மற்றும் வடிவமைப்புகளுக்கான (சிறந்த வண்ணங்கள்) தேவை அதிகரித்தல் | வெயில் காலங்களில் பனை ஓலை கிடைக்காத சூழ்நிலை | வெளிநாட்டு சந்தையில் நுழையவும் மேலும் இயற்கைப் பொருட்களுக்கான தேவை அதிகமாக உள்ள நகர்ப்புறங்களுக்குள் ஊடுறுவுவதற்கான வாய்ப்பு அதிகம் | சீனாவில் இருந்து விலைக் குறைவாக பொருட்கள் இறக்குமதி செய்யப்படுதல் (பைகள், தொப்பி போன்றவை) |
| **கோழி வளர்ப்பு** | குறைவான முதலீடு தேவைப்படுகிறது<br><br>லாபகரமானது | இயற்கை பேரழிவுகள் மற்றும் சீதோஷண மாற்றங்கள், | கோழி மற்றும் முட்டைகளுக்கு தேவை தொடர்ந்து இருத்தல் | புதிதாக திறக்கப்பட்ட சூப்பர் மார்கெட்டுகள் சந்தைப்படுத்துவதன் காரணமாக பெரிய |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | | நோய்கள் | | நிறுவனங்களின் போட்டி |
| **தையல்** | குறைவான முதலீடுதான் தேவை | திறன்கள் மற்றும் புதிய தொழில்நுட்பக் குறைபாடு (தொழில் துறைக்கான தையல் இயந்திரங்கள்) | மாறிவரும் ஆடையணிகலன் போக்குகள்<br><br>சமூக வலைதளங்களில சந்தைப்படுத்தும் வாய்ப்பு | ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள் விலை மலிவான பொருட்களை அதிகமாக சந்தைக்கு கொண்டு வருதல் |

## அட்டவணை 33: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - மன்னார்

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | குடும்பத் தொழிலாக செய்ய முடியும்<br><br>நிலம் இருத்தல் | சீதோஷண ஏற்றத்தாழ்வு உற்பத்தியை பாதித்தல்<br><br>மோசமான தண்ணீர் மேலாண்மை | தேசிய சந்தைக்கு வாய்ப்பு<br><br>அரசின் ஆதரவு | பருகாலத்திற்கு ஏற்ற மாற்றங்கள்<br><br>சீதோஷண நிலை, பருவகால மாற்றங்கள், இயற்கைப் பேரழிவுகள் |
| **மீன்பிடித்தல்** | கடற்கறை வளங்கள் அதிகமாக இருத்தல்<br><br>இந்த துறையில் ஏற்கெனவே குடும்பத்தினர் ஈடுபடுத்தப் பட்டிருத்தல் | மோசமான தொழில்நுட்பம்<br><br>பருவகால தொழில் | மீனுக்கான அதிக தேவை<br><br>அதிக வருமானம் ஈட்ட முடியும் | பருவகாலம்<br><br>இயற்கைப் பேரழிவுகள் / புயல்கள் போன்றவை அதிக ஆபத்தை ஏற்படுத்தும் |
| **உணவுப் பொருள்** | துவங்க குறைவான | மேலாண்மைத் | பொருட்களுக்கான | பெரிய சூப்பர் |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **கடைகள்** | முதலீடு தேவை | திறன்கள் மற்றும் நிதி மேலாண்மைத் திறன்கள் குறைவு | அதிக தேவை | மார்க்கெட்டுகளின் போட்டி<br><br>வாடிக்கையாளர்கள் கடனில் வாங்க விரும்புதல் |
| **பனை ஓரை கைவினைப் பொருட்கள்** | துவங்குவது எளிது<br><br>சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானது<br><br>உள்ளூரிலேயே வளங்கள் கிடைத்தல் | உள்ளூர் விற்பனையாளர்கள் குறைவான விலை தருதல், வடிவமைப்புத் திறன்கள் குறைவு, உள்ளீட்டுப் பொருட்களின் (டை) விலை அதிகம் | நகர்ப்புற மற்றும் சர்வதேச சந்தைகளை அடைதல் மற்றும் அங்கிருந்து தேவைகள் | பிளாஸ்டிக் பொருட்களின் போட்டி அதிகரிப்பு |
| **கால்நடை** | தரமான பாலுக்கான தேவை அதிகரிப்பு | மோசமான உணவு வழங்கும் முறைகள் | புதிய சந்தைகளைச் சென்றடைவதற்கான வாய்ப்பு | திருடர்கள் மூலமாக ஆபத்து<br><br>நோய்கள் |
| **கோழி வளர்ப்பு** | லாபகரமானது<br><br>தரமான கோழி மற்றும் முட்டைகளுக்கான தேவை | தேவைகள் பருவகாலத்திற்கு ஏற்ப மாறுதல் | அந்த பகுதியில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் தேவையை பயன்படுத்திக் கொள்ளுதல் | பெரிய தொழில் துறையினரின போட்டி |
| **தையல்** | சிறிய முதலீடு தேவை<br><br>தரம் மற்றும் வடிவமைப்புத் தேவைகள் | புதிய தொழில் நுடபங்களை (தொழில்துறை தையல் இயந்திரங்கள் வாங்குதல், விஞ்ஞானப் பூர்வ ஆடை உருவாக்க தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்) தொழிலில் பயன்படுத்தாமல் | நிறைய விசேஷங்கள் அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தும்.<br><br>பள்ளி மற்றும் இதர சீருடைகளுக்கான தேவை | பெரிய ஆடை உற்பத்தியாளர்கள் மூலமாக ஆயத்த ஆடைகள் குறைவான விலையில் சந்தைப் படுத்தப்படுதல் |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | | இருத்தல்.<br><br>சரியான நேரத்தில் பணியை முடிக்கத் தவறுதல் | | |

**அட்டவணை 44: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - முல்லைத்தீவு**

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | நிலம் இருத்தல் | சீதோஷண மாற்றங்கள்<br><br>பருவகாலத்திற்கு ஏற்ப மாறுபடும் நிலை .மோசமான தண்ணீர் மேலாண்மை உரங்கள் கிடைக்காமல் போதல் | தேசிய சந்தையைச் சென்றடையும் வாய்ப்பு<br><br>தனியார் மற்றும் அரசு கொள்முதல் மையங்களை உருவாக்குதல் | விலைகுறைந்த ஏற்றுமதிகளின போட்டி |
| **பத்திக் பொருள்** | மேம்பட்ட வடிவமைப்பிற்கான தேவை | கச்சாப் பொருட்கள் – இழை, டை போன்றவை கிடைக்காமை | சுற்றுலா வருவோரிடம் இதை விற்பனை செய்ய முடியும்<br><br>நகர்ப்புற மற்றும் சர்வதேச சந்தைகளை அடைய முடியும் | விலை மலிவான மாற்றுப் பொருட்களின் போட்டி |
| **அழகுப் பொருள்** | சேவைகளுக்கான தேவை அதிகரிக்கிறது<br><br>லாபகரமானது | தொழில்நுட்பத் திறன்கள் குறைவு | திருமணங்கள் மற்றும் இதர நிகழச்சிகளுக்காக சேவைகளின் தேவை அதிகரித்தல் | இந்த துறைக்கு வரும் பல பெண்களிடமிருந்து போட்டி அதிகரித்தல் |
| **மீன் பிடித்தல்** | கடற்கறை வளங்கள் | கடல் உணவுப் பொருட்களை பதப்படுத்தும் | மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்களை (கருவாடு) | ஒரு மாற்றாக டின்களில் அடைக்கப்பட்ட |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | | தொழில்நுட்பம் இன்மை | சந்தைப்படுத்தும் வாய்ப்பு | மீன்கள் கிடைக்கப் பெறுதல் |
| **பனையோனை கைவினைப பொருட்கள் உற்பத்தி** | கச்சாப் பொருட்கள் கிடைத்தல்<br><br>மேம்பட்ட வடிவமைப்புகள கிடைக்கப் பெறுதல் | மோசமான தொழில்நுட்பத் திறன்கள் | நகர்புற மற்றும் சர்வதேச சநதைகளை அணுகும் வாய்ப்பு | பிளாஸ்டிக் பொருட்களால் அதிகரிக்கும் போட்டி |
| **கால்நடைகள்** | புள்வெளி இருத்தல்<br><br>பாலுக்கான தேவை | சரியான பராமரிப்பின்மை | பிராந்திய சந்தையைச் சென்றடையும் வாய்ப்பு | சீதோஷண மற்றும் பருவகால மாற்றங்களால் பாதிக்கப்படுதல் |
| **கோழி வளர்ப்பு** | லாபகரமானது மேலும் குறைவான முதலீட்டில் வீட்டிலிருந்தே செய்ய முடியும் | பருவகாலத்திற்கு ஏற்ப தேவையில் மாற்றங்கள் | ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களிடம் இருந்து புதிய சந்தைகள் உருவாக வாய்ப்பு | பெரிய தொழில் நிறுவனங்களிடமிருநது போட்டி |
| **வீட்டுத் தோட்டம் அமைத்தல்** | நிலங்கள் கிடைக்கப் பெறுதல் | சரியான பராமரிப்பின்மை | இயற்கையான, ரசாயன பாதிப்பில்லாத பொருட்களுக்கான தேவையின் காரணமாக வெளிநாட்டு சந்தை வாய்ப்பு | விலை மலிவான இறக்குமதிப் பொருட்கள் |
| **தையல்** | சிறிய முதலீடு போதுமானது | புதிய தொழில்நுட்பங்கள் இன்மை | சமூக வலைதளங்கள மூலமாக புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடைய முடியும் | வாடிக்கையாளர்களின் மாறி வரும் தேவைகள் மற்றும ஆயத்த ஆடை நிறுவனங்களின் போட்டி |
| **காய்கறி உற்பத்தி** | ஆரோக்கியமான இயற்கைப் பொருளுக்கான தேவை | பருவகால ஏற்றத் தாழ்வுகள் | ரசாயனமற்ற பொருட்களுக்கு நகர்புற சந்தைகளில் அதிக தேவை | போட்டியாளர்கள் ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் அதிக உறபத்தி செயது விலை மலிவாக வழங்க முடியும் |

அட்டவணை 55: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - வவுணியா

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | நிலம் இருத்தல்<br><br>இயற்கை வேளாண் பொருட்களுக்கான தேவை | தேவை பருவகாலத்திற்கு ஏற்ப மாறுதல்<br><br>பருவகால மாற்றங்கள்<br><br>மோசமான தண்ணீர் மேலாண்மை | தேசிய சந்தையை அடையக்கூடிய வாய்ப்பு<br><br>சந்தையில் புதிய காய்கறிகளுக்கான தேவை, விழாக் காலங்களில் தேவைகள் அதிகரித்தல் | மோசமான சீதோஷண மற்றும் பருவகாலங்கள்<br><br>இயற்கை பேரழிவுகள் |
| **நார் பொருட்கள்** | நல்ல தரமான பொருட்களுக்கான தேவை | முறையாக சேமிக்காமல் இருப்பது பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் | இயற்கைப் பொருட்களுக்கான தேவை | நாட்டிற்கு வெளியிலிருந்து வரும் பிளாஸ்டிக் கொருட்களால் போட்டி |
| **இனிப்புகள்** | சுவையான சுகாதாரமான பொருட்களுக்கான தேவை | முறையற்ற பேக்கிங் மற்றும் தரக்குறைவான பொருட்கள் | விழாக்கள் மற்றும் உள்ளூர் பொருட்காட்சிகளில் பொருளுக்கான தேவை | இறக்குமதி செய்யப்பட்ட இனிப்புகள் குறைந்த விலையில் கிடைத்தல் |
| **பனையோலை கைவினைப் பொருட்கள்** | கச்சாப் பொருட்கள் கிடைத்தல்<br><br>மேம்பட்ட வடிவமைப்புகளுக்கான தேவை<br><br>சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கைப் பொருட்களுக்கான தேவை | மோசமான தொழில்நுட்பத் திறன்கள்<br><br>பழிய வடிவமைப்புகளை பயன்படுத்துதல்<br><br>பல்வேறு வண்ணங்கள இன்மை | நகர்புற மற்றும் சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதற்கான வாய்ப்பு | பிளாஸ்டிக் பொருட்களின் போட்டி அதிகரித்தல் |
| **கால்நடைகள்** | பாலுக்கான தேவை<br><br>சிறந்த தரத்திற்கான தேவை | மோசமான தீவனம் வழங்கும் முறைகள் | பெரிய நிறுவனங்கள் / வாங்குவோரிடமிருந்து (மில்கோ) தேவை<br><br>ஹோட்டல்கள் மற்றும் | திருடர்களால் பாதிப்பு<br><br>நோய் கால்நடைகளை பாதித்தல் |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | | | உணவகங்களிடமிருந்து தேவை | |
| **கோழி வளர்ப்பு** | சரியாக செயதால் லாபகரமானது<br><br>தரமான கோழி மற்றும் முட்டைக்கான தேவை | பருவ காலத்திறகு ஏற்ப வாடிக்கையாளர்களின் தேவையில் மாற்றம் | சந்தைகளை விரிவுபடுத்த வாய்ப்பு – ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் | பெரிய நிறுவனங்களிடமிருந்து அதிகரிக்கும் போட்டி |
| **வீட்டுத் தோட்டம்** | நிலம் இருத்தல் | குறைவான பராமரிப்பு மற்றும் மேலாண்மை | ரசாயன பாதிப்பற்ற பொருட்களுக்கான தேவையுள்ள சந்தையை பயன்படுத்தும் வாய்ப்பு | விலை குறைவான இறக்குமதிப் பொருட்கள் |
| **தையல்** | சிறிய முதலீடு போதுமானது<br><br>தரம் மற்றும் வடிவமைப்பிற்கான தேவை | புதிய தொழில்நுட்பங்கள் இன்மை | பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களால் தேவை அதிகரித்தல், பள்ளி சீருடைகளுக்கான தேவைகள் | குறைந்த விலையில் ஆயத்த ஆடைகள் கிடைத்தல் |
| **காய்கறி உற்பத்தி** | அதிக பாதிப்புள்ள பக்க விளைவுகளைத் தவிர்க்க ஆரோக்கியமான உணவிற்கான தேவை | பருவகாலத்திற்கு ஏற்ப தேவை மாறுபடுதல் | இரசாயன உரங்கள் மற்றும் பூச்சுக்கொல்லிகள் இல்லாமல் வளர்க்கப்பட்ட இயற்கை உணவுக்கு அதிக தேவை | இரசாயன உரங்களைப பயன்படுத்தும் போட்டியாளர்களள் அதிக மகசூளைப் பெற்று குறைந்த விலையில் விற்பனை செய்தல் |

### அட்டவணை 26: தொழில்முனைவோரால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் SWOT மதிப்பாயவு - திருகோணமலை

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | நிலங்கள் இருத்தல்<br><br>இயறகை விவசாயப் | பருவ காலத்திறகு ஏற்ப தேவை மாறுதல | தரமான பொருளுக்கான அதிக | விலை மலிவான பொருட்களின் போட்டி |

| | பலங்கள் | பாகீனங்கள் | வாய்ப்புகள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| | பொருட்களின் தேவை | பயிற்சி மற்றும் புரிதல் குறைவு | தேவை | பருவகால மாற்றங்கள் |
| **வீட்டுத் தோட்டம்** | குறைந்த முதலீட்டில் வீட்டுத் தொழிலாக செய்ய முடியும் | பயிற்சியின்மை<br>முதலீடின்மை | இயற்கைப் பொருட்களுக்கான தேவை | இரசாயனங்களைப் பயனபடுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிடமிருந்து போட்டி |
| **மீன் பிடித்தல்** | கடல் வளம் | கடல் உணவினைப் பதப்படுத்தும் தொழில்நுட்பம் இன்மை | மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்களுக்கான சந்தை<br>தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளை அணுகும் வாய்ப்பு | டின்னில் அடைக்கப்பட்ட மீன் கிடைத்தல் |
| **கால்நடை** | பாலுக்கான தேவை<br>நல்ல தரமான பொருளுக்கான தேவை | மோசமான தீவனம் வழங்கும் முறை | பாலை (கொள்முதல்) செய்வதில் நிறுவனங்கள் ஈடுபாடு காட்டுதல்<br>ஹோட்டல்கள் மற்றும உணவகங்களிடமிருந்து தேவை | திருடர்களால் பாதிப்பு<br>நோய் |
| **கோழி வளர்ப்பு** | வீட்டுத் தொழிலாக செய்ய முடியும் | பயிற்சியின்மை | ஹோட்டல்கள் மற்றும உணவகங்களின் சந்தையை அணுகும் வாய்ப்பு | பெரிய தொழில நிறுவனங்களிடம் இருந்து அதிகரிக்கும் போட்டி |
| **தையல் தொழில்** | வீட்டுத் தொழிலாக செய்ய முடியும் | நவீன முறைகள் மற்றும் வடிவமைப்புகளைப் பற்றிய பயிற்சியின்மை மற்றும் புரிதலின்மை | ஆடை அலங்காரத்தில் தொடர் மாற்றங்கள் காரணமாக அதிக தேவை | ஆயத்த ஆடை நிறுவனங்களி; போட்டி |

## முறையான வேலை வாய்ப்பிற்கான தற்போதைய நிலை மற்றும் தேவைகள்

வடக்கு மாவட்டங்கள் மற்றும் திரிகோணமலையில் உள்ள பணியாளர் சார்ந்த புள்ளியியல் தகவல்களின்படி தேசிய சராசரியைக் காட்டிலும் வேலை வாய்ப்பின்மை அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது மேலும் பெரும்பாலானவர்கள் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பதிலளித்தோரிடம் நாடு திரும்பிய பெண்களுக்கு உள்ள வேலை வாய்ப்புகள் பற்றி கேட்கப்பட்டது, அதில் கண்டறியப்பட்ட தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம்**: முக்கிய தகவல் வழங்குவோர் சுற்றுலா மற்றும் ஹோட்டல்கள், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், வங்கியியல், கணக்கியல், கட்டிடப்பணி மற்றும் ஆடைத் தயாரிப்புத் துறையை குறிப்பிட்டுள்ளனர். தொழில்முனைவோர் கணக்கியல, வாகன உற்பத்தி, வங்கியியல், அழகு கலை, கட்டிடக் கட்டுமானத் துறை, தரவு உள்ளீடு மற்றும் சந்தைப்படுத்தும் பணிபுரிவோர்கள, மீன்தொழில், ஆடை மற்றும் பின்னல் தொழில், மளிகை, ஹோட்டல்கள், காபபீடு, தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை, தனியார் ஆசிரியர்கள் / டியூஷன் மற்றும் தையல் (பயிற்சி பெறுவோராக) ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

**கிளிநொச்சி** : முக்கிய தகவல் வழங்குவோர் சுற்றுலா மற்றும் ஹோட்டல்கள், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், கணக்கியல், கட்டிடப்பணி மற்றும் ஆடைத் தயாரிப்புத் துறையை குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை தொழில்முனைவோர் விவசாயம், நார்ப்பொருள் உற்பத்தி, கட்டிடப்பணி, மீன்படி தொழில்துறை, ஆடைகள், ஹோட்டல்கள், காப்பீடு, தகவல் தொழில்நுட்பம், கூலிப்பணியாளர் (இதர வேலைகளுக்கு), கால்நடை வளர்ப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் தையல் ஆகியவற்றை தெரிவித்தனர்.

**மன்னார்**: முக்கிய தகவல் வழங்குவோர், அழகு கலை, உணவு சம்மந்தமான தொழில்துறை, விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல், கைவினைப் பொருட்கள், கால்நடை வளர்ப்பு மற்றும் ஆடைத் தொழில ஆகியவற்றை வேலை வாய்ப்பு தரும் தொழில்களாக குறிப்பிடடனர். அதேநேரம் தொழில் முனைவோரால் பட்டிக் துணி உற்பத்தி, அழகு கலை, கேக் செய்தல், மாடு வளர்ப்பு, கருவாடு தயாரிப்பு, உணவு பதப்படுத்துதல், ஆடைத் தயாரிப்பு, அரசுப் பணிகள், மளிகை கடைகள், கைவினைப் பொருட்கள், வீட்டுத் தோட்டம், பனையோலை கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, கோழிப் பண்ணை, சிறிய உணவகங்கள் மற்றும் தையல் தொழில் ஆகியவை சார்ந்த பணி வாய்ப்புகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு:** முக்கிய தகவல் வழங்குவோர், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், சுற்றுலா மற்றும் ஹோட்டல்கள், ஆடைத் தயாரிப்புத் துறையை, விவசாயம் மற்றும் இதர பணிகளைக் குறிப்பிட்டுள்ளனர். தொழில்முனைவோர் விவசாயம் (துணைப் பணிகள்),

வங்கியியல், காப்பீடு, அழகுகலை, கேட்டரிங், கட்டிடப்பணி, நிதி அமைப்புகள, மீன்படி தொழில்துறை, ஆடை தயாரிப்பு, ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளனர்.

**வவுணியா**: முக்கிய தகவல் வழங்குவோர் காபபீடு (சந்தைப்படுத்துதல்), தகவல் தொழில்நுட்பம், ஆடைத் தயாரிப்பு, ஹோட்டல் மற்றும் சுற்றுலா, சந்தைப்படுத்துதல் மற்றும் இதர வேலைகள் ஆகியவற்றை கண்டறிந்துள்ளனர். தொழில் முனைவோர் கணக்கியல், தச்சு வேலை, சுத்தம் செய்வோர், சமையல் – உதவியாளர்கள், தரவு உள்ளீட்டுப் பணியாளர்கள், வரைவு தயாரிப்போர், ஆடை தயாரிப்பு, ஹோட்டல் மற்றும் சுற்றுலா, வீடு சுததம் செய்வோர், வீட்டுப் பணியாளர்கள், காப்பீடு விற்பனைப் பெண்கள், கூலி வேலை, சந்தைப்படுத்துதல், செவிலியர் பணி, இதர வேலைகள், பேக்கேஜ் பணியாளர்கள், மருந்து உற்பத்தியாளர்கள், விற்பனைப் பணியாளர்கள், வரவேற்பறை பணியாளர்கள், கடை – உதவியாளர்கள், தையல் வேலை, தட்டச்சுப்பணி, மற்றும் கிராஃபிக் வடிவமைப்பு ஆகியவற்றைக் கண்டறிந்துள்ளனர்.

**திருகோணமலை** : முக்கிய தகவல் வழங்குவோர் கண்டறிந்தவற்றில் தகவல் தொழில்நுட்பம், ஆசிரியர் பணி, தனியார் வங்கிப் பணிகள் மற்றும் அரசு பணிகள் அடங்கும். தொழில் முனைவோர் கண்டறிந்தவற்றில் ஆடைத் தயாரிப்பு, அரசுப் பணிகள், ஹோட்டல்கள், ஆப்பம் விற்பனை செய்தல் மற்றும் பின்னலாடைப் பணிகள் அடங்கும்.

## உதவி அமைப்புகள்

நாடு திரும்பியோர் குறிப்பிட்ட ஆதரவு அமைப்புகளில் அடங்குபவை: டி.எஸ். அலுவலகம்

1. ஆஃபர் சிலோன் (OfERR Ceylon)
2. யூ.என்.ஹெச்.சி.ஆர் (UNHCR)
3. ஐ.ஓ.எம் (IOM)
4. கேரிட்டாஸ் (CARITAS)
5. யூனிசெஃப் (UNICEF)
6. கேர் (CARE)
7. யூ.என்.டி.பி (UNDP)
8. ஸோவா (ZOA)
9. ஜே.ஆர்.எஸ் (JRS)
10. இலங்கை அரசு
11. வடக்கு பிராந்திய கவுன்சில்
12. இந்திய வீட்டுத் திட்டம்

13. வேர்ல்டு விஷன்

## பயிற்சி மையங்கள்

கீழ்கண்டவை பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு வாய்ப்புள்ள மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

**யாழ்ப்பாணம் – பயிற்சி வாய்ப்புகள்**

1. சிலோன் ஸ்பின்னிங் பயிற்சி மையம் – உடுபபிடி
2. தொழில்கள் துறை
3. தொழில் பயிற்சி அமைப்பு – VTA
4. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA
5. ஹாஸ்பிட்டாலிட்டி சுற்றுலா பயிற்சி மையம்
6. ஐடிஎம் கணினி பயிற்சி மையம்
7. தொழில்நுட்பக் கல்லூரி – கோக்குவில்
8. கே-எய்மஸ் தொழில் பள்ளி – ஜாஃப்னா
9. தொழில் கல்வி மையம் – IBS
10. சர்வதேச தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி – ICBT
11. தொழில்நுட்ப கல்லூரி
12. யாழ்பாண பல்கலைக் கழகம்
13. விதாதா வள மையங்கள - VRC, டி.எஸ். அலுவலகம்
14. தேசிய இளைஞர் சேவைகள் கவுன்ஸில் – NYSC

**கிளிநொச்சி – பயிற்சி வாய்ப்புகள்**

1. தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு– IDB
2. தொழிற்பயிற்சி அமைப்பு– VTA
3. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA
4. சிவனருள் நார் பணிக்கான பயிற்சி மையம் – புலோப்பாளை
5. தேசிய இளைஞர் சேவைகள் கவுன்ஸில்– NYSC
6. டிஎம்ஐ கணினிக் கல்வி மையம், கில்லிநொச்சி
7. வாதியாடி (ஐசிடி, தையல் பயிற்சி)

8. நெசவு மையம், கில்லிநொச்சி
9. பயன்முறை சார்ந்த கல்விக்கான பிரிட்டிஷ் கல்லூரி - BCAS
10. ஐடிஎம் கணினி மையம்
11. இலங்கை ஜெர்மன் பயிற்சி மையம்– SLGTI

**மன்னார் - பயிற்சி வாய்ப்புகள்**

1. தொழில் பயிற்சி அமைப்பு – VTA
2. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA
3. மாற்றுத்திறனாளிப் பெண்கள் நிறுவனம்
4. பனையோலைப் பொருட்கள் பயிற்சி மையம்
5. தையல் பயிற்சி மையம்
6. கிராம மேம்பாட்டுத் துறையினர் வழங்கும் தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் பயிற்சி
7. மண்டல கல்வி அலுவலகம்
8. YGRO (NGO)
9. தேசிய இளைஞர் சேவைகள் கவுன்ஸில் – NYSC
10. ஸோவா (INGO)

**முல்லைத் தீவு - பயிற்சி வாய்ப்புகள்**

1. விதாதா வள மையங்கள - VRCs
2. டிஎஸ் அலுவலக பயிற்சி மையம் – ஒடுசுடன்
3. ஹிதராமணி வழங்கும் ஆடைப் பயிற்சி (பணியின்போது வழங்கும் பயிற்சி– OJT)
4. தொழில் பயிற்சி அமைப்பு – VTA
5. இலங்கை திறந்தநிலை பல்கலைக்கழகம்
6. கைத்தறி மையம், முறைசாரா கல்வி
7. தேசிய இளைஞர் சேவைகள் கவுன்ஸில் – NYSC
8. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA

**வவுணியா - பயிற்சி வாய்ப்புகள்**

1. தொழில் பயிற்சி அமைப்பு – VTA
2. தேசிய இளைஞர் சேவைகள் கவுன்ஸில் – NYSC
3. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA
4. பெண்கள் கிராமப்புற வளர்ச்சி மையம– WRDS
5. விதாதா வள மையங்கள - VRCs
6. தொழில் கல்லூரி

7. மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு நிறுவம் - ORHAN (தொண்டு நிறுவனம்)
8. கிராம மேம்பாட்டு மையம்

**திருகோணமலை - பயிற்சி வாய்ப்புகள்**

1. தேசிய பயிற்சிப் பருவ மற்றும் தொழில்துறை பயிற்சி அமைப்பு– NAITA
2. தொழில் பயிற்சி அமைப்பு – VTA
3. தொழில் கல்லூரி